

කාර්ය සාධන වාර්තාව

செயலாற்றுகை அறிக்கை

PERFORMANCE REPORT

2022

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කිලිනොච්චිය

மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி.

District Secretariat - Kilinochchi.

செயற்திறன் அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் - 2023

மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி.

உள்ளடக்கம்

01. நிறுவனத்தின் விபரம்

1.1	மாவட்ட செயலாளரின் ஆசியுரை	1-2
1.2	கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அறிமுகம்	3
1.2.1	நிர்வாக எல்லைகள்	3
1.2.2	வரலாற்று முக்கியத்துவங்கள்	4
1.2.3	இயற்கை வளங்கள்	4
1.2.4	வர்த்தக பொருளாதார செயற்பாடுகள்	4
1.3	மாவட்ட செயலகத்தின் தொலை நோக்கு செயற்பணி பெறுமதிகள்	5
1.3.1	மாவட்ட செயலகத்தின் குறிக்கோள்	6
1.4	மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்	6-7
1.5	மாவட்ட செயலக அமைப்பு வரைபடம்	8
1.6	பிரதேச செயலகங்கள் கிராம அலுவலர் பிரிவுவிபரங்கள்	9
1.6.1	சனத்தொகை பற்றிய தகவல்	9
1.6.2	அடிப்படைத் தகவல்கள்	9

02. முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 8-34

2.1	சிறப்புஅடைவுகள் மற்றும் சவால்கள்	10
2.2	கிராம அபிவிருத்தி திணைக்கள செயற்பாடுகள்	10-11
2.3	நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்	11-12
2.4	மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல்	12
2.5	முன் பிள்ளை பருவ அபிவிருத்தி	13
2.6	சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் செயற்பாடுகள்	14-17
2.7	உள்ளக கணக்காய்வுக் கிளை செயற்பாடுகள்	17-19
2.8	காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயற்பாடுகள்	19
2.9	தொழிற்துறைத் திணைக்களத்தின் செயற்பாடுகள்	20-23
2.10	கலாச்சார அலுவல்கள் திணைக்களம்	23-25
2.11	தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் செயற்பாடுகள்	26
2.12	திட்டமிடற் செயலகத்தின் செயற்பாடுகள்	27-28
2.13	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு திறன்	29-31
2.14	சமூக சேவைகள் திணைக்களம்	31-32

2.15	விவசாய அபிவிருத்தி திட்ட செயற்பாடுகள்	33-34
2.16	மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் செயற்பாடுகள்	34-35
2.17	மாவட்ட பதிவாளர் அலுவலக செயற்பாடுகள்	35-36
2.18	சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகள்	37-38
2.19	திறன்கள் அபிவிருத்தி பிரிவு	38
2.20	வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திணைக்களம்	38
2.21	விதாதா பிரிவு	39

03. டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை

3.1	நிதிச்செயலாற்றுகை பற்றிய கூற்று	40
3.2	நிதிநிலமைபற்றிய கூற்று	41
3.3	காசுப்பாய்ச்சல் கூற்று	42
3.4	நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்	43-72
3.5	வருமான சேகரிப்பு செயலாற்றுகை	73
3.6	ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை	74
3.7	நி.பி குறிப்பு 208 பிரகாரம் செலவினத்திற்கான ஒதுக்கீடு	74-82
3.8	நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை	83
3.9	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	84-99

04. செயலாற்றுகை சுட்டிகள்

4.1	நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்	100

05. பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

5.1	அடையாளம் காணப்பட்டபேண்தகுஅபிவிருத்தி இலக்குகள்	101
5.2	பேண்தகுஅபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்	102-105

06. மனிதவள விபரம்

6.1	பதவியணி முகாமைத்துவம்	106
6.2	பற்றாக்குறையான மனித வளங்கள்	106
6.3	மனிதவள அபிவிருத்தி	107

07. இணக்கப்பாட்டு அறிக்கைகள்

1. நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டமை 108-114
2. புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி 445)
3. நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி 135)
4. வருடாந்த திட்டம் தயாரித்தல்
5. கணக்காய்வு ஜயவினாக்கள்
6. உள்ளக கணக்காய்வு
7. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு
8. ஆதன முகாமைத்துவம்
9. வாகன முகாமைத்துவம்
10. வங்கிக்கணக்குகளின் முகாமை
11. நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்
12. அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு
13. பொது வைப்புக்கணக்கு
14. முற்பணக்கணக்கு
15. வருமானக்கணக்கு
16. மனித வள முகாமைத்துவம்
17. பொது மக்களுக்கான தகவல் வழங்கல்
18. பிரசைகள் பட்டயத்தினைச் சமர்ப்பித்தல்
19. மனித வளத்திட்டத்தினைத் தயாரித்தல்
20. கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்

மாவட்ட செயலாளரின் ஆசியுரை



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2022ம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திறன் அறிக்கை மற்றும் நிதியறிக்கையினை கையளிக்கின்றேன். இந்த அறிக்கையானது அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களை உருவாக்குகின்ற மற்றும் செயற்படுத்தல் நடவடிக்கையின் பொருட்டு திறைசேரியினால் 2022ம் ஆண்டிற்காக ஒதுக்கப்படுகின்ற ஒதுக்கீடுகள், கட்டுநிதிகள் என்பன மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் எவ்வாறு சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை தெளிவாக எடுத்துரைக்கின்றது.

வடமாகாணத்தின் மையப்பகுதியில் அமையப்பெற்ற கிளிநொச்சி மாவட்டமானது கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி என்னும் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இம் மாவட்ட மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயம் திகழ்வதுடன் மீன்பிடி,பனை மற்றும் தெங்கு சார்ந்த பொருட்கள் உற்பத்தி மற்றும் பல்வேறு சுயதொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.
2022 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மற்றும் கிராமத்துடனான அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் ஊடாக பல்வேறு

வேலைத்திட்டங்கள் மாவட்டத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை மாத்திரமன்றி கிராம அபிவிருத்தி, அனர்த்த முகாமைத்துவம், சமூக சேவை மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவினரால் பொதுமக்கள் நலன்கருதி பல்வேறுபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட அலுவலக செயற்பாடுகள் மூலமாக மக்களுக்கு வினைத்திறனான சேவைகள் வழங்கப்படுவதுடன் இது சார்ந்த பல பயிற்சிகள் அலுவலர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தேசிய உற்பத்தி திறன் போட்டியில் இரண்டு தடவைகள் முதலாம் இடத்தினை பெற்ற மாவட்ட செயலகம், கிளிநொச்சி

அடுத்து தங்க விருதினைப்பெறும் வகையிலான உற்பத்தி திறன் செயற்பாடுகளை செவ்வனே மேற்கொள்கிறது.

மேலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் பல்வேறு உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ செயலமர்வுகள் மற்றும் வடகீழ்ப்பருவக்காற்று மழை மற்றும் மொன்டஸ் புயலின் போதான பதிலிறுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சிறுவர்கள், பெண்கள், முதியோர் போன்ற பல்வேறு பிரிவினருக்குரிய உதவித்திட்டங்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாட்டினை கருத்திற்கொண்டு விவசாயம், போக்குவரத்து மற்றும் ஏனைய தேவைகளுக்கு அவசியமான எரிபொருளினை சீரான முறையில் விநியோகம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் நான்கு பிரதேச செயலகங்கள் ஊடாக மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் உணவுப் பாதுகாப்பு மற்றும் வீட்டுத்தோட்ட செய்கை தொடர்பான பல்வேறு செயற்றிட்டங்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட மக்களின் உணவுத் தேவையை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் எமது மாவட்டத்தை நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதை இலட்சியமாகக் கொண்டு சிறந்த பொதுமக்கள் சேவையை வழங்குவதே எமது நோக்காகும்.

திருமதி.ரூ.கேதீஸ்வரன்,
அரசாங்கஅதிபர்/மாவட்டச்செயலாளர்.
மாவட்டசெயலகம்,
கிளிநொச்சி.


திருமதி.ரூ.கேதீஸ்வரன்
அரசாங்க அதிபர்/
மாவட்டச் செயலாளர்
கிளிநொச்சி மாவட்டம்

01. நிறுவனத்தின் விபரம்

1.1 கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அறிமுகம்

1.1.1 நிர்வாக எல்லைகள்

வட மாகாணத்தின் மத்தியில் அமைந்திருக்கும் கிளிநொச்சி மாவட்டமானது வடக்கு எல்லையாக யாழ்மாவட்டமும், கிழக்கு தெற்கு எல்லைகளாக முல்லைத்தீவு மாவட்டமும், மேற்கு, தெற்குஎல்லைகளாக மன்னார் மாவட்டத்தையும் கொண்டுவிளங்குகின்றது.



1.1.2 வரலாற்று முக்கியத்துவங்கள்

இலங்கையின் முதலாவது மனிதக்குடியிருப்பின் தொடக்கப் புள்ளியாக இரணைமடு அடையாளப்படுத்தப்பட்ட தன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தினது வரலாற்று தொண்மை ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்து காணப்பட்ட கிளிநொச்சி பிரதேசம் புதிய மாவட்டம் ஒன்றாக 1984ம் ஆண்டு நிறுவப்பட்டது. அக்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயம், வேட்டைத்தொழில், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களை மேற்கொண்டதுடன் அவற்றைசேமிக்கும் பழக்கங்களையும் கொண்டிருந்தனர்.

இம் மாவட்டத்தில் காணப்படுகின்ற இரணைமடுக்குளம் உட்பட நான்கு பாரிய நீர்ப்பாசனக்குளங்களும் ஐந்து நடுத்தர நீர்ப்பாசனக்குளங்களும் 394 சிறிய நீர்ப்பாசன குளங்களும் இம் மாவட்டத்தில் அமைந்துள்ளமை மக்களின் தொழில் முறையை எடுத்தியம்புகிறது. மேலும் தொழில் நுட்பமும் கலை நயமும் பொருந்திய மக்கள் இங்கு வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

இம் மாவட்டத்தின் வரலாற்று பெருமைகளாக உருத்திரபுரம் சிவன் கோயில், புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், மண்ணித்தலை புனித அந்தோனியார் ஆலயம், பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயம், பொன்னாவெளி சிவன் ஆலயம் என்பவற்றுடன் பூநகரி ஒல்லாந்தர் கோட்டையும் காணப்படுகின்றது.

1.1.3 இயற்கை வளங்கள்

இயற்கை வளங்களாக இரணைமடுக்குளம், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம், வன்னேரிக்குளம் பறவைகள் சரணாலயம் மற்றும் கௌதாரிமுனை கடற்கரை என்பவை விளங்குகின்றன.

1.1.4 வர்த்தக பொருளாதார செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்ட மக்களின் பெரும்பாலானவர்கள் நெற்செய்கையுடன் உப உணவுப் பயிர்ச்செய்கை கால்நடைவளர்ப்பு, பழமரச் செய்கை மற்றும் மீன்பிடித் தொழில் என்பவற்றை மேற்கொள்கின்றனர்.

1.2 மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு செயற்பணி பெறுமதிகள்

துாரநோக்கு

நவீன மயப்படுத்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தினூடாக பயனுறுதி மிக்க மக்கள் சேவையை வழங்கல்

செயற்பணி

அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத்திறனைப் பயன்படுத்தி சிறந்த ஒருங்கிணைப்பின் மூலம் மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் சமூக பண்பாட்டு விழுமியங்களை உயர்த்துதல்.

பெறுமதிகள்

1. பாகுபாடற்ற நேர்மையான பயனுறுதி மிக்க விரைவான மக்கள் சேவையை வழங்கல்.

2.ஒரே பதவி நிலையில் உள்ள ஊழியர்கள் சமமாக மதிக்கப்படுவதுடன், ஊழியர்களின் நலன்சார் விடயங்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

3.சூழல் நட்பு அணுகு முறைகளைப் பயன்படுத்துதல்

4.மாற்று வலுவுள்ளோர், முதியோருக்கான கண்ணியமான சேவையினை வழங்கல்.

5.அலுவலகத்தில் பின்பற்றப்படும் கோட்பாடுகள் மற்றும் நெறிமுறைகளை ஊழியர்கள் அனைவரும் பின்பற்றுதல்.

6.நவீன இலத்திரனியல் முறைமையினூடாக பொதுமக்களிற்கு இலகுவான சேவை வழங்கல்.

1.2.1 மாவட்டசெயலகத்தின் நோக்கங்கள்

- தரவுகளை இலத்திரனியல் மயப்படுத்துதலினூடாக இலகுவான மக்கள் சேவையினை முன்னெடுத்தல்.
- வினைத்திறனான வளப்பயன்பாடு
- சேவை பெறுநர் மற்றும் வளங்களினுடைய உற்பத்தித்திறனை உச்சமட்டத்திற்கு கொண்டு செல்லல்.
- சூழல்நேயஉற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துதல்.
- மக்களுக்கு இலகுவானதும் வினைத்திறனானதுமான சேவையை வழங்கக் கூடியவகையில் அலுவலகத்தை ஈர்ப்பு மற்றும் தக்கவைத்தல் நிலைக்கு கொண்டு வருதல்.
- மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை தேசியவாழ்க்கைத் தரமட்டத்திற்கு சமமாக உயர்த்துதல்.
- சமூர்த்தி அடிப்படைக் கட்டுமான விருத்தி, தொழில் வாய்ப்பு போன்ற செயற்திட்டங்களின் ஊடாக வறுமையினைக் கணிசமானஅளவுகுறைத்தல்.
- வாழ்வாதார உதவிகள் மூலம் நிலைபேறான வருமான மட்டத்தை உறுதிப்படுத்தல்.
- நிறுவனத்திற்கான மாற்ற முகாமைத்துவத்தினைக் கட்டியெழுப்புதல்.
- நிறுவனத்தின் நிலைத்திருப்பு வளர்ச்சியினை அடைந்து கொள்ளல்.
- பேண்தகு அபிவிருத்தி மட்டத்தை தொடர்ச்சியாக உறுதிப்படுத்துதல்.

1.3 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

வினைத்திறனான மாவட்ட நிர்வாக முறைமை

- மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களிற்கான கணினி வலையமைப்புக்கள், உள்ளக கணினி வலையமைப்பு முறைகள் வெளியக வலையமைப்புக்கள் என்பவற்றை ஏற்படுத்தல்.
- உத்தியோகத்தர்கள் தொடர்பான தனிநபர் கோவைகளை பேணுதல்,சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்,புகையிரத ஆணைச் சீட்டுகள் வழங்கல், உத்தியோகத்தர்களின் பதவிகளிற்கு தேவையான பயிற்சிகளை வழங்கல்.
- ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிற்கான ஓய்வூதிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

தூயபொதுச் சேவைகளை கிராம,பிரதேச மற்றும் மாவட்ட பொது மக்களிற்கு வழங்குவதும், வழங்கப்படுவதை உறுதிப்படுத்தலும் .

- அடையாளஅட்டைகள் மோட்டார் வாகன வரி வியாபாரஅனுமதிப் பத்திரங்கள் வழங்கல்.
- பிறப்பு இறப்பு மற்றும் திருமண பதிவுகளைதாமதமின்றி மேற்கொள்வதும் அவற்றின் பிரதிகளை வழங்குதலும்.
- சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளலும், காணிப்பிரச்சனைகளை தீர்த்து வைத்தலும்.

- கலாச்சார விழுமியங்கள் மற்றும் உடல் உளசார் நலன் பேணல்.
- கலைகலாச்சார விழாக்களை நடாத்துதல், கலைகலாச்சாரம் சம்பந்தமான போட்டிகளை நடாத்துதல், கலாச்சாரம் சம்பந்தமான விளையாட்டு நிகழ்வுகளை நடாத்துதல்.
- மாவட்ட விளையாட்டு நிகழ்வுகள்மற்றும் மாற்றுத் திறனாளிகளிற்கான விளையாட்டு நிகழ்வுகள் நடாத்துதல்.
- சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு ஏதுவான வகையில் சிறுவர்கள் இளைஞர்களிற்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல், உளவள மேம்பாட்டிற்கான கருத்தரங்குகள் நடாத்துதல்.


கிராம பிரதேச மட்டங்களில் உள்ள மக்களின் கல்வி,சுகாதாரம், விவசாயம் போன்றவற்றிற்கு உதவுவதுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களிற்கு நிவாரணங்களும் வாழ்வாதார உதவிகளும் வழங்கல்.

- பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு சுயதொழில் பயிற்சிகள், ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
- முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளிகள் மற்றும் விசேட நோய் உடையோருக்குமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளுதல்.
- அனர்த்த முகாமைத்துவ சேவை பிரிவினால் கிராமிய மட்டங்களில் திடீர் அனர்த்தம் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல் அனர்த்த நிவாரண சேவைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளல்.
- வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளலும், தேர்தல் ஒருங்கிணைப்பும்.
- விவசாயிகளிற்கான விதைகள்,உள்ளீடுகள் மற்றும் விவசாய உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல்.
- வீதி அபிவிருத்தி,நீர்ப்பாசன, மின்சாரவசதிகளை ஒழுங்கமைத்தல், வீடமைப்புதிட்டங்களை நெறிப்படுத்துதல்,யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கல் மற்றும் மாவட்டத்தின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்து வழிப்படுத்தல்.

மாவட்டச் செயலகம், கிளிநொச்சி நிர்வாக கட்டமைப்பு

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, කිලිනොච්චිය ආයතන ව්‍යුහය

District Secretariat, Kilinochchi Organization Chart



1.5 பிரதேச செயலகங்கள்,கிராம அலுவலர் பிரிவு விபரங்கள்

பிரதேச செயலர் பிரிவு	கிராம அலுவலர் பிரிவு
கரைச்சி	**42**
கண்டாவளை	**16**
பூநகரி	**19**
பச்சலைப்பள்ளி	**18**

1.5.1 சனத்தொகை பற்றிய தகவல்

தொ. இல	பிரதேச செயலகங்கள்	குடும்பங்கள்	உறுப்பினர்கள்	ஆண்	பெண்	தமிழர்	சிங்களவர்	முஸ்லீம்
01	கரைச்சி	26,910	78,470	37,923	40,547	77,516	93	861
02	கண்டாவளை	9,265	27,377	13,300	14,077	27,350	2	25
03	பூநகரி	8,448	27,799	13,899	13,900	26,088	8	1703
04	பச்சிலைப்பள்ளி	4,804	14,802	7,280	7,522	14,751	24	27
மொத்தம்		**49,427**	**148,448**	**72,402**	**76,046**	**145,705**	**127**	**2,616**

1.5.2 அடிப்படைத் தகவல்கள்

மாவட்டம்	கிளிநொச்சி
மாகாணம்	வடக்கு
மொத்தப் பரப்பளவு	1279 sqkm
கிராமஅலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை	95
கிராமங்களின் எண்ணிக்கை	354
வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை	95
பிரதேச சபைகளின் எண்ணிக்கை	03
வலயக்கல்விப் பணிமனைகள் எண்ணிக்கை	02
பாடசாலைகளின் எண்ணிக்கை	104
மாணவர்களின் எண்ணிக்கை	29,118
ஆசிரியர்களின் எண்ணிக்கை	2,119
சனத்தொகை	148,452

02. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள் மற்றும் சவால்கள்

2.2 கிராமஅபிவிருத்தி திணைக்கள செயற்பாடுகள்

வடமாகாண சபையின் கீழ் இயங்கும் கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும். கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலக பிரிவிலும் 173 கிராம அபிவிருத்தி சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் கிராம மட்டத்தில் சிறப்பாக இயங்கும் சமூகமட்ட அமைப்பாக காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றிருக்கும் கிராமப்புற யுவதிகளை சுயதொழிலில் ஊக்குவிக்கும் முகமாகவும், பாடசாலைக்கல்வியை இடைநிறுத்தி வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கும் பெண்களுக்கும் உதவும் நோக்குடன் மகளிர் அபிவிருத்தி நிலையங்களை நிறுவி மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் ஊடாக கிராமத்தில் பெண்கள் சார்பான பல தரப்பட்ட ஆடை வடிவமைத்தல், கைவேலை, மனைப்பொருளியல் அழகியல் பயிற்சிகளை வழங்கி வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் தலா 20 மாணவர்கள் வீதம் 80 மாணவர்கள் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர். இவர்களுக்கு 12 மாத காலத்தினைக் கொண்ட மனைப்பொருளியல் டிப்ளோமா பாடத்திட்டம் எனும் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஓவ்வொரு மாணவர்களுக்கும் நாள் ஒன்றுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 200.00 வழங்கப்படுகின்றது. பயிற்சியின் முடிவில் அனைத்து பிரதேச செயலக பிரிவிலும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு இறுதியாக கண்காட்சியும் பிரதேச மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்றது.(Four WDC regiterd under the TVEC and got NVQ level IV certificates)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் இணையத்தகவல் முறைமை மூலம் தேவையான விடயங்களை பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* பிரதேச ரீதியாக தரவேற்றம் செய்து தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.
* பதிவு செய்யப்பட்ட சங்கங்கள்.
* பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் நிர்வாக விபரங்கள்.
* பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சொத்து விபரம்.
* சங்கங்கள் மற்றும் சங்க அங்கத்தவர்களின் தரமான உற்பத்திகள் தொடர்பான விபரம்.

* திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கிராம மாதர், கிராம அபிவிருத்தி சங்கங்களின் பதிவு இலக்க விபரங்கள்.
* தரவிறக்கம் செய்யக்கூடிய வசதி
* யாப்பு விதிகள்
* பயிற்சி விண்ணப்பங்கள்
* பதிவுச் சான்றிதழ்
* திணைக்கள சுற்று நிருபங்கள்

என்பன உள்ளடக்கப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு ஏற்ற வகையில் சிறப்பாக செயற்படுகின்றது.

பிராமண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்

வேலைத்திட்டங்கள்	ஒதுக்கீடு	செலவு
சம்புக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் புனரமைப்பு	300,000.00	300,000.00
முகாவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் புனரமைப்பு	324,515.17	324,515.17
மொத்தம்	**624,515.17**	**624,515.17**

2.3 நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

திணைக்களமானது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருவதுடன் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தோறும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது. இந்நியமனமானது எல்லா சிறுவர்களுக்கும் சமமான சந்தர்ப்பத்தை வழங்குவது விசேடமாகஅனாதரவாக்கப்பட்ட, கைவிடப்பட்ட மற்றும் சட்டத்துடன் முரண்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்குவதாகும். 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் வருமாறு :-

இல	நிகழ்ச்சித்திட்டம்	மாவட்டச்செயலகம் / பிரதேச செயலகம்	செலவு விபரம்
01	மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல்	மாவட்ட செயலகம்	11,500.00
02	மாவட்ட சிறுவர் சபை கலந்துரையாடல்	மாவட்ட செயலகம்	10,060.00
03	போற்றத்தக்க குழந்தையாக மாறுவதற்கான திறன் மேம்பாட்டு கலந்துரையாடல்	பிரதேச செயலகம்	20,000.00
04	சிறுவர் கழக மற்றும் சிறுவர் சபை கலந்துரையாடல்	பிரதேச செயலகம்	24,000.00
05	பிரதேச சிறுவர் அபிவிருத்தி குழு கலந்துரையாடல்	பிரதேச செயலகம்	32,000.00
06	பிரதேச செயலக சிறுவர் தின நிகழ்வு	பிரதேச செயலகம்	12,000.00
07	பராமரிப்பு நிகழ்ச்சி திட்டம்	பிரதேச செயலகம்	213,393.00
08	மாவட்டச் செயலக சிறுவர் தின நிகழ்வு	மாவட்ட செயலகம்	3,105.00

09	இடைவிலகிய,வரவுஒழுங்கின்மையான மாணவர்களுக்கான கல்வி உதவி	பிரதேச செயலகம்	24,000.00
10	இரட்டைக் குழந்தைகளுக்கான கொடுப்பனவு	பிரதேச செயலகம்	22,500.00
11	மருத்துவக் கொடுப்பனவு	பிரதேச செயலகம்	10,000.00
12	சத்துணவு கொடுப்பனவு	பிரதேச செயலகம்	5,000.00
13	இணையவழி பாதுகாப்பு விழிப்புணர்வு	பிரதேச செயலகம்	11,880.00
14	அதிக அச்சுறுத்தலுக்குள்ளான சிறுவர்களுக்கான உதவி	பிரதேச செயலகம்	90,000.00
மொத்தம்			**489,438.00**

2.4 மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு

இல	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டவிபரம்	செலவுத் தொகை
01	பால் நிலை வன்முறைக்குள்ளான நபர்களுக்கான அவசர உதவித் திட்டம்	பால் நிலை வன்முறைக்குள்ளான நபர்களுக்கு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் அடையாளம் கண்டவர்களுக்கு வழங்கினமை.	25,000.00
02	சர்வதேசமகளிர்தினம்	சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் தெரிவு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 5 பெண் தொழில் முயற்சியாளர்களின் வியாபார நிலையங்களை கண்காணிக்கச் சென்ற பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான காகிதாதி உபசரணைச் செலவு மேற்கொள்ளப்பட்டது.	5,000.00
03	மாவட்ட முன்னேற்ற கலந்துரையாடல்	பெண்கள் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான மாதாந்த மற்றும் வருட இறுதிசெயற்பாட்டு திட்டங்களின் முன்னேற்ற கலந்துரையாடல் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத்துணை உதவியாளர்களுடன் நடாத்தப்பட்டது.	4,000.00
மொத்தம்			34,000.00

2.5 முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி

முன்பிள்ளை பருவம் என்பதுகர்ப்பத்தில் உருவாகும் குழந்தையின் காலப் பகுதியில் இருந்து 5 வயது வரையான காலப் பகுதியாகும்.முன்பிள்ளை பருவ அபிவிருத்தி என்பது சிறுவர்களின் பௌதீக, மனவெழுச்சி, சமூக, மற்றும் அறிவு வளர்ச்சி என்பவற்றில் ஒன்று குவிந்த ஒரு முழுமையான அணுகு முறையை வலியுறுத்துவதாகும்.

இதன் நோக்கம் சிறுவர்களை உடல், உள விருத்தி மற்றும் தெளிவான மனநிலையுடனும் நல்ல பழக்க வழக்கத்துடனும் பாடசாலை செல்வதற்கான சுபாவ நிலைக்கு அவர்களை தயார்படுத்தல் ஆகும்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்தால் நாடு முழுவதும் உள்ள சிறுவர்களை கருத்திற் கொண்டு, பின்வரும் செயற்பாடுகளை அமுல் படுத்தி வருகின்றன.

பிரதான செயற்பாடுகள் :-

- ❖ முன்பள்ளி சிறுவர்களுக்கு போசாக்கு மிக்க காலை உணவு வழங்குதல்.
- ❖ கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ரூபா 20,000.00 பெறுமதியான போசாக்கு பொதி (10 மாதங்களுக்கு) வழங்குதல்.
- ❖ சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகளில் இருந்து முற்பாதுகாப்பளித்தல்.
- ❖ சம்பளம் பெறாத முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு உதவித் தொகை ரூ.2500.00 வழங்குதல்.
- ❖ உலக சிறுவர் தினம் மற்றும் பிள்ளைநேய சூழல் உருவாக்கும் நிகழ்ச்சி திட்டங்களைஅமுல்படுத்துதல்.
- ❖ முன்பிள்ளை பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ❖ முன்பள்ளிகளை சிறப்பாக நிர்மாணம் செய்தல். (உலக வங்கியின் 5 வருட திட்டம்)

இல	அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சி	பௌதீக முன்னேற்றம்	ஒதுக்கீடு	செலவினம்	மிகுதி
1	கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ரூ.20,000 பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்குதல்.	100	31,008,000	29,560,000	14,480,00
2	முன்பள்ளிச் சிறுவர்களுக்கு காலை உணவு வழங்குதல் திட்டம்	100	31,77,850	31,77,850	00

3	முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.2500 மாதாந்த கொடுப்பனவு வழங்குதல்	100	900,000.00	865,000	35,000
4	சிறுவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கியமை	100	84,000.00	84,000	00
மொத்தம்		100	35,169,850	33,686,850	1,483,000

2.6 சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் செயற்பாடுகள்

இளைஞர் யுவதிகளின் வியாபார இயலுமை மற்றும் பயன்தரு தன்மையினை விருத்தி செய்வதன் மூலம் தொழில் நிர்மானத்தினை அதிகரித்து வருமான மட்டத்தினை உயர்த்தி நாட்டின் பொருளாதார துறையில் முயற்சியாளர்களின் உச்சவாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் முகமாக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவு பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. அவ்வகையில் வணிக வாய்ப்புக்களினை அடையாளம் காணுதல்,வணிகப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல்,சந்தை வாய்ப்புக்களினை அடையாளம் காணுதல், தொழில்நுட்பபயிற்சி வழங்குதல் மற்றும் வணிகத்தினை விருத்தி செய்தல் தொடர்பாக தொழில் முயற்சியாளர்களின் நலன்சார்ந்த பல திட்டங்கள் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பயிற்சி நெறிகள் தொடர்பான விபரம் - 2021

இல	பயிற்சி நெறிகள் தொடர்பான விபரம்	மாவட்டம் /பிரதேச செயலகம்	பயனாளிகள் எண்ணிக்கை	செலவு
01	உத்தியோகத்தர் கலந்துரையாடல்	மாவட்ட செயலகம்	13	2,700
02	வணிக வங்கிக்கான பிரதிகள் எடுத்தல்	மாவட்ட செயலகம்	13	5,500
03	உத்தியோகத்தர் கலந்துரையாடல்	மாவட்ட செயலகம்	13	2,200
04	முயற்சியாண்மை விழிப்புணர்வு மற்றும் மனப்பாங்கு	பச்சிலைப்பள்ளி	20	2,450
05	முயற்சியாண்மை விழிப்புணர்வு மற்றும் மனப்பாங்கு	கண்டாவளை	20	2,410
06	தொழல்நுட்ப பயிற்சி - கேக் ஜசிங் தயாரித்தல்	கண்டாவளை	20	12,120
07	முயற்சியாண்மை விழிப்புணர்வு மற்றும் மனப்பாங்கு	கரைச்சி	20	5,200
08	இளைஞர் முயற்சியாண்மை ஊக்குவிப்பபு	கரைச்சி	20	6,200
09	புதியவியார சந்தர்ப்பங்களை அடையாளம் காணுதலும் செயற்படுத்தலும்.	கரைச்சி	20	7,900

10	இளைஞர் முயற்சியாண்மை ஊக்குவிப்பபு	கண்டாவளை	20	3,660
11	இளைஞர் முயற்சியாண்மை ஊக்குவிப்பபு	பச்சிலைப்பள்ளி	20	3,700
12	முயற்சியாண்மை விழிப்புணர்வு மற்றும் மனப்பாங்கு	பூநகரி	20	2,700
13	உத்தியோகத்தர் கலந்துரையாடல்	மாவட்ட செயலகம்	13	2,950
14	தொழில் முயற்சியாளாகளுக்கான வணிக மற்றும் வங்கி தொடர்பான நடமாடும் சேவை	மாவட்ட செயலகம்	120	50,720
15	இளைஞர் முயற்சியாண்மை ஊக்குவிப்பு	பூநகரி	20	3,700
16	தொழல்நுட்ப பயிற்சி - மாடு வளர்ப்பும் வாழ்வாதாரமும்	கரைச்சி	20	10,200
17	தொழல்நுட்ப பயிற்சி - கேக் ஜசிங் தயாரித்தல்	பச்சிலைப்பள்ளி	20	9,460
18	தொழல்நுட்ப பயிற்சி - தேனீர் வளர்ப்பு	கண்டாவளை	20	10,160
19	தொழல்நுட்ப பயிற்சி - கேக் ஜசிங் தயாரித்தல	பூநகரி	20	9,940
20	சந்தைப்படுத்தல் விரிவாக்கம்	கரைச்சி	10	9,800
21	விலை மதிப்பீடு	கண்டாவளை	20	6,649
22	விலை மதிப்பீடு	பூநகரி	20	4,700
23	விலை மதிப்பீடு	கரைச்சி	20	7,200
24	செலவுப்பதிவு	கரைச்சி	20	7,200
25	செலவுப்பதிவு	கண்டாவளை	20	6,649
26	செலவுப்பதிவு	பூநகரி	20	4,700
27	உத்தயோகத்தர் பயிற்சி (MIS SEDD)	மாவட்ட செயலகம்	15	9,700
28	புதிய வியார சந்தர்ப்பங்களை அடையாளம் காணுதலும் செயற்படுத்தலும்.	கண்டாவளை	20	4,649
29	பிரதேச மட்ட கண்காட்சி	பூநகரி	30	25,700
30	பிரதேச மட்ட கண்காட்சி	கண்டாவளை	30	23,600
31	பிரதேச மட்ட கண்காட்சி	பச்சிலைப்பள்ளி	32	20,000
32	மாவட்ட மட்ட கண்காட்சி	மாவட்ட செயலகம்	40	21,600
33	உத்தியோகத்தர் கலந்துரையாடல்	மாவட்ட செயலகம்	13	2,250
34	மாவட்ட மட்ட கண்காட்சி	மாவட்ட செயலகம்	40	21,800
35	செலவுப்பதிவு	கண்டாவளை	20	6,200
36	விலை மதிப்பீடு	கண்டாவளை	20	6,200
37	புதிய வியார சந்தர்ப்பங்களை அடையாளம் காணுதலும் செயற்படுத்தலும்.	கரைச்சி	20	5,200
38	முயற்சியாளர் சம்மேளனம் அமைத்தல் - அழகுக்கலை நிபுணர்கள்	மாவட்ட செயலகம்	40	9,700
39	தொழல்நுட்ப பயிற்சி - ஆரி வேலை	பச்சிலைப்பள்ளி	20	9,520

40	தொழல்நுட்ப பயிற்சி - ஆரி வேலை	கரைச்சி	20	8,000
41	தொழல்நுட்ப பயிற்சி - ஆரி வேலை	பூநகரி	20	10,100
42	உத்தியோகத்தர் கலந்துரையாடல்	மாவட்ட செயலகம்	15	2,450
43	தொழல்நுட்ப பயிற்சி - முடி கலர் செய்தல்	மாவட்ட செயலகம்	58	11,700
44	தீபாவளி சந்தை	மாவட்ட செயலகம்	48	219,010
45	தொழல்நுட்ப பயிற்சி - தையல் மிசின் திருத்துதல்	கரைச்சி	20	8,700
46	தொழல்நுட்ப பயிற்சி - கை பை தைத்தல்	கரைச்சி	20	13,200
47	தொழல்நுட்ப பயிற்சி - மெழுகுதிரி செய்தல்	பூநகரி	20	16,450
48	இளைஞர் முயற்சியாண்மை ஊக்குவிப்பபு	கரைச்சி	30	8,200
49	வியாபார சட்ட ஒழுங்கு முறைகள்	பச்சிலைப்பள்ளி	30	4,700
50	புதிய வியார சந்தர்ப்பங்களை அடையாளம் காணுதலும் செயற்படுத்தலும்.	பூநகரி	30	6,200
51	தொழல்நுட்ப பயிற்சி - பாரம்பரிய உணவு தயாரித்தல்	கண்டாவளை	20	10,820
52	விலை மதிப்பீடு	கரைச்சி	20	9,200
53	சந்தைப்படுத்தல் விரிவாக்கம்.	பூநகரி	10	6,000
54	சந்தைப்படுத்தல் விரிவாக்கம்.	கண்டாவளை	10	6,000
55	தொழல்நுட்ப பயிற்சி - ஆரி வேலை	பச்சிலைப்பள்ளி	25	19,900
56	இளைஞர் முயற்சியாண்மை ஊக்குவிப்பபு	கண்டாவளை	20	3,200
57	செலவுப்பதிவு	கரைச்சி	20	9,200
58	முயற்சியாண்மை அபிவிருத்தி மேம்படுத்தல் பாடசாலை	பச்சிலைப்பள்ளி	60	9,700
59	சந்தைப்படுத்தல் விரிவாக்கம்.	கரைச்சி	10	6,000
60	முயற்சியாண்மை அபிவிருத்தி மேம்படுத்தல் பாடசாலை	பூநகரி	60	9,900
61	சிறு வியாபார முகாமைத்துவம்	மாவட்ட செயலகம்	30	11,200
62	தொழல்நுட்ப பயிற்சி - ஆபரணம் தயாரித்தல்	கரைச்சி	20	14,900
63	தொழல்நுட்ப பயிற்சி - ஆரி வேலை	பச்சிலைப்பள்ளி	30	16,400
64	விலை மதிப்பிடு	கண்டாவளை	20	4,700
65	செலவுப்பதிவு	கண்டாவளை	20	4,700
66	தொழல்நுட்ப பயிற்சி - பால் சார் உணவு உற்பத்தி	பூநகரி	20	9,900
67	வியாபாரத்திட்டம் தயாரித்தல்	கரைச்சி	20	16,400
68	தொழல்நுட்ப பயிற்சி - CCTV கமரா திருத்துதல்	கண்டாவளை	20	10,400

69	உத்தியோகத்தர் கலந்துரையாடல்	மாவட்ட செயலகம்	14	2,250
70	வியாபார ஆலோசனை - கள விஜயம்	பூநகரி	4	5,562
71	வியாபாரத்திட்டம் தயாரித்தல்	பூநகரி	20	22,300
72	தொழல்நுட்ப பயிற்சி - பாடசாலை ஆடை தயாரித்தல்	கரைச்சி	25	15,150
73	முயற்சியாண்மை அபிவிருத்தி மேம்படுத்தல் பாடசாலை	கண்டாவளை	60	11,100
74	தொழல்நுட்ப பயிற்சி – பனை சார் உற்பத்தி	பச்சிலைப்பள்ளி	25	21,300
75	அனுபவ பகிர்வு - கள விஜயம்	யாழ்ப்பாணம்	30	30,718
76	தொழல்நுட்ப பயிற்சி - கேக் மலர் அலங்காரம்	மாவட்ட செயலகம	25	28,900
77	வியாபார சட்ட ஒழுங்கு முறைகள்	கண்டாவளை	20	4,400
78	வியாபாரத்திட்டம் தயாரித்தல்	மாவட்ட செயலகம்	22	19,300
79	தொழல்நுட்ப பயிற்சி - மணப்பெண் அலங்காரம்.	மாவட்ட செயலகம்	30	20,400
80	முயற்சியாளர் சம்மேளனம் அமைத்தல் - தையல்	மாவட்ட செயலகம்	60	15,000

2.7 உள்ளக கணக்காய்வுக் கிளை செயற்பாடுகள்

உள்ளகக்கணக்காய்வுக் கிளை மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளையும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் வினைத்திறன்களையும் விருத்தி செய்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வுக் கிளையினால் இவ் வருடம் மேம்படுத்தப்பட்ட ஆண்டுக்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் மாதந்தோறும் ஆண்டிற்கான வேலைத்திட்டத்திற்கமைவாக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைவாக மாதாந்த முன் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2021ம் வருடத்தில் மொத்தமாக பதினெட்டு கணக்காய்வு அவதானிப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பதினெட்டு அவதானிப்புக்களுக்கான பதில்கள் உரிய காலத்தில் கிடைக்கப் பெற்றதுடன் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கடந்தவருடத்துடன் ஒப்பிடும் போதுஉள்ளகக் கணக்காய்வுநடவடிக்கைகள் இவ்வருடம் வினைத்திறனாகக் காணப்பட்டுள்ளது.

விடயம்	மாவட்டச் செயலகம்	பிரதேசசெயலகம்				மொத்தம்
		கரைச்சி	கண்டாவளை	பச்சிலைப்பள்ளி	பூநகரி	
அவதானிப்புக்கள்	04	03	03	03	05	18
பதில்கள்	04	03	03	03	05	18
கிடைக்கப் பெறாதபதில்கள்	-	-	-	-	-	-

மேலும் அவதானிப்புக்களின் பிரதிகள் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளருக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

உள்ளகக் கணக்காய்வுகளில் தோன்றிய பிரச்சனைகளைத் தீர்வுசெய்யும் முகமாக வருடத்தில் நான்கு கணக்காய்வு முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. இவ்வருடத்திற்கான கூட்டங்களில் முதலாவது, இரண்டாவது மற்றும் நான்காவது கூட்டத்தில் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் Online மூலமும் (Zoom) மூன்றாவது கூட்டத்திற்கு மாவட்டச் செயலகத்திற்கு வருகை தந்து பங்குபற்றியதுடன் உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் முதலாவது கூட்டத்தில் Online மூலமும் (Zoom) பங்குபற்றியுள்ளார்கள்.

கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்	முதலாம் காலாண்டு - 2022	இரண்டாம் காலாண்டு- 2022	மூன்றாம் காலாண்டு - 2022	நான்காம் காலாண்டு - 2022
மாவட்ட செயலகம் கிளிநொச்சி	22.03.2022	10.06.2022	14.09.2022	27.12.2022
பிரதேச செயலகம் - கரைச்சி	18.02.2022	19.05.2022	12.08.2022	26.10.2022
பிரதேச செயலகம் - கண்டாவளை	01.02.2022	04.05.2022	04.08.2022	28.10.2022
பிரதேச செயலகம் - பச்சிலைப்பள்ளி	15.02.2022	04.05.2022	10.08.2022	20.10.2022
பிரதேச செயலகம் - பூநகரி	23.02.2022	29.04.2022	03.08.2022	21.10.2022

மேலும் பிரதேச செயலகங்களில் உள்ளகக் கணக்காய்வுக் கிளை ஸ்தாபிக்கப்பட்டு முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக கணக்காய்வு செயற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் செயற்திட்டங்களை பார்வையிட்டு அவற்றின் வினைத்திறன் பற்றிய அறிக்கைகள் அரசாங்க அதிபருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் முறைமைகளினை பலப்படுத்தும் முகமாகவும் ஆபத்துக்களை தவிர்க்கும் முகமாகவும் கலந்துரையாடப்பட்டது.

- உள்ளக்கக் கட்டுப்பாடும் ஆபத்தும்
- உள்ளகக் கணக்காய்வு அவதானிப்பும் சீர்செய்தலும்
- கள விஜயம் தொடர்பான அவதானிப்புக்கள்
- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஜயவினாக்கள் மீள்பரிசீலனை செய்தல்.
- கடந்தகால அரச கணக்கு குழுவின் கூட்ட அறிக்கை மீதான செயற்பாட்டு முன்னேற்றம்

2.8 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயற்பாடுகள்

திணைக்களத்தின் நோக்கு நாட்டின் நில வளத்தை சிறப்பாக பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதாகும். இந்த நோக்கை அடைவதற்கு வேண்டிய பல பணிகளை திணைக்களம் மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக மேற்கொண்டு வருகின்றது.

தொ. இல	நிகழ்வுகள்	இடம்	நிதி ஒதுக்கீடு	செலவு	சதவீத அடைவு
01	காணிப் பயன்பாட்டு தரவுகளை திரட்டுதல், இற்றைப்படுத்தல், தரவு பரிமாற்றுதல் மற்றும் திட்டமிடல்	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	88,120.00	86,296.00	97.9%
02	பங்களிப்பு அணுகுமுறை ஊடாக நிலைபேண்தகு நிலப் பயன்பாடுக்காக கிராமிய மட்டத்தில் காணி பயன்பாட்டு திட்டங்களை தயாரித்தல்.	கண்டாவளை, பச்சிலைப்பள்ளி	52,000.00	52,000.00	100%
03	காணியின் உரிமை மற்றும் பயன்கொள்ளல் தொடர்பான ஆய்வு	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	21,260.00	20,230.00	95.15%
04	மாவட்ட காணிப்பயன்பாட்டுக் குழுக் கூட்டம்	மாவட்டம்	13,500.00	12,430.00	92%
05	பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டம்	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி,பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	32,500.00	32,120.00	98.8%

2.9 தொழில்துறைத் திணைக்களத்தின் செயற்பாடுகள்

எமது திணைக்களத்தின் செயற்பாடுகள்

- கைத்தறி உற்பத்தியும் பயிற்சியும்.
- தும்பு உற்பத்தியும் பயிற்சியும்
- பாரம்பரிய சிறு கைத்தொழில் பயிற்சி.
- ஏனைய பாரம்பரியமற்ற தொழிற்பயிற்சிகள்

2022ம் ஆண்டில் தொழிற்துறைத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட தொழிநுட்ப பரிமாற்ற பயிற்சிநெறிகளின் விபரம் கீழ்வருமாறு.

இல	பயிற்சி நெறி	கிராம அலுவலர் பிரிவு	பிரதேச செயலர் பிரிவு	காலப்பகுதி	பயனாளிகளின் எண்ணிக்கை
01	பாரம்பரிய ஆரோக்கிய உணவு உற்பத்தி செய்முறை	கல்மடுநகர்	கண்டாவளை	03 நாட்கள்	15
02	Aari emprodery training	கிருஸ்ணபுரம்	கரைச்சி	07 நாட்கள்	17

குறுங்கால பயிற்சிநெறி





தொழில் முயற்சி சார்ந்த சேவைகள் 2022

இல	விபரம்	பயனாளிகள் எண்ணிக்கை	செலவு விபரம்	காலப்பகுதி
01	எமது கைத்தறி நெசவு நிலையத்தில் கைத்தறி நெசவு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டமை.	2		01.01.2022 – 31.12.2022
02	எமது கைத்தறி நெசவு நிலையத்தில் கைத்தறி நெசவு பயிற்சி வழங்கப்பட்டமை.	4		01.07.2022 – 31.12.2022
03	எமது தும்பு உற்பத்தி நிலையத்தில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டமை.	4		01.01.2022 – 31.12.2022
04	புது வருடத்தை முன்னிட்டு தொழில் முயற்சியாளர்களுக்கு சிறப்பு சந்தை ஒழுங்கமைக்கப்பட்டமை. (மூனறு பிரதேச செயலாளர் பிரிவுகள்)	123	56,750.00	07.04.2022 09.04.2022
05	தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மாபெரும் வர்த்தக சந்தை மாகாண மட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. (எமது மாவட்டத்திலிருந்து சிறந்த தொழில்முயற்சியாளர்கள் 7 பேர் பங்குபற்றியிருந்தனர்.)	07		11,12.01.2022

புதுவருட விற்பனை சந்தை - 2022





மாகாணமட்ட வர்த்தக சந்தை - 2022





தொழில் முயற்சியாளர்களுக்கு NVQ சான்றிதழ் வழங்குவதற்கான விழிப்புணர்வு செயற்திட்டங்கள் பிரதேச செயலக ரீதியாக NAITA நிறுவனம் ஊடாக வழங்கப்பட்டமை

பிரதேச செயலாளர் பிரிவு	விழிப்புணர்வு செயற்திட்டம் நடைபெற்ற திகதி	பங்குபற்றிய தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை	புகைப்படங்கள்
கரைச்சி	09.06.2022	20	
கண்டாவளை	02.06.2022	14	
பூநகரி	03.06.2022	12	
பச்சிலைப்பள்ளி	08.06.2022	4	

மேற்படி செயற்திட்டத்தின் ஊடாக 99 தொழில் முயற்சியாளர்களுக்கு NVQ சான்றிதழ்கள் வழங்குவதற்கான் விண்ணப்பப் படிவங்கள் NAITA நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு தகுதியான 78 தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு இதற்கான கட்டணமாக NAITA மற்றும் TVEC நிறுவனங்களுக்கு ரூபா 120,000 செலுத்தப்பட்டுள்ளது.

ILO நிறுவனம் வட மாகாண தொழிற்துறை திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தும் LEED Project இன் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு தொழில் முயற்சியாளர்கள்

தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் தொழில்முயற்சியை விரிவுபடுத்துவதற்கு தலாரூபா150,000 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்கள், விற்பனை நிலையங்கள்

- கைத்தறி நெசவு நிலையம் - தர்மபுரம், கண்டாவளை.
- தும்பு உற்பத்தி நிலையம் - புலோப்பளை, பச்சிலைப்பள்ளி.
- பொதியிடல் நிலையம் - பள்ளிக்குடா, பூநகரி
- உள்ளூர் உற்பத்திபொருள் விற்பனை நிலையம் - திருநகர், கரைச்சி.

2.10 கலாசார அலுவல்கள் திணைக்களம்

01.சர்வமத வழிபாடு

2022ஆம் ஆண்டின்ஆரம்பத்தை முன்னிட்டு ஆசிவேண்டிப் பிரார்த்தனைகள்பின்வரும் வணக்கஸ்தலங்களில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 116 பேருக்கு மேல் கலந்து கொண்டிருந்தனர்.

1. புனித பாப்பரம்மா தேவாலயம், இத்தாவில், பச்சிலைப்பள்ளி
2. கற்பக விநாயகர் ஆலயம், பிரமந்தனாறு, கண்டாவளை
3. முகைதீன் ஜீம்மா பள்ளிவாசல், நாச்சிக்குடா
4. லும்மினி விகாரை, கிளிநொச்சி






02. பொது நூலகங்களுக்கு நூல்கள் வழங்கல்

நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இரண்டு நூலகங்கள் வீதம் எட்டு நூலகங்களுக்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில்30 பேர் கலந்து கொண்டனர்.

1. கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்
2. பொது நூலகம், முரசுமோட்டை
3. கிளி/சோறன்பற்று விக்கினேஸ்வரா வித்தியாலயம்
4. கிளி/மாசார் அ.த.க பாடசாலை
5. கிளி/தட்டுவன்கொட்டி கண்ணகை வித்தியாலயம்
6. கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்
7. கிளி/முற்கொம்பன் மகா வித்தியாலயம்

8. கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்
9. பொது நூலகம், பூநகரி
10. மாவட்ட செயலக நூலகம், கிளிநொச்சி






03. மாவட்ட கலை இலக்கியவிழா

கிளிநொச்சிமாவட்ட கலை இலக்கிய விழா பரந்தன், இராசம்மா மணி மண்டபத்தில் 2022.09.23ஆம் திகதி இடம்பெற்றது. கலை நிகழ்வுகள்,கலைஞர்கள் கௌரவிப்பு,தேசியகலை இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் கௌரவிப்புஎன்பன இடம்பெற்றன. இந்நிகழிவில் 300பேர் வரையிலானோர் கலந்துகொண்டனர்.






04. பன்னிருமாத விளக்கு வேலைத் திட்டம்

உணவுப்பயிற்செய்கையினை ஊக்குவிக்கும் நோக்கில் கலைமன்ற மாணவர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் ஆகியோருக்கு மரக்கறிப் பயிற்செய்கைக்கான நாற்றுக்கள் வழங்கப்பட்டன.






செய்து முடிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் செலவு விபரம் - 2022

செலவுத் தலைப்பு	வேலைத் திட்டம்	நடைபெற்ற பிரதேசம்	நடை பெற்ற திகதி	பங்கு பற்றியவர்கள் எண்ணிக்கை	மொத்தச் செலவு
206-02-03-1409	சர்வமத வேலைத் திட்டம்	1.புனித பாப்பரம்மா தேவாலயம், இத்தாவில் 2.கற்பகவிநாயகர் ஆலயம், பிரமந்தனாறு, 3.முகைதீன் ஜீம்மா பள்ளிவாசல், நாச்சிக்குடா 4. லும்மினி விகாரை, கிளிநொச்சி	07.01.2022 04.01.2022 11.01.2022 11.01.2022	22 54 30 10	10000.00
206-02-02-2401	மாவட்ட பயிற்சிப்பட்டறை	மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.		36	6,000.00
206-02-02-02-1409	மாவட்டப ண்பாட்டு விழா	இராசம்மா மணிமண்டபம், பரந்தன், கிளிநொச்சி	23.09.2022	300	60,000.00
206-02-03-09-1409	பன்னிரு மாத விளக்கு வேலைத் திட்டம்-	1. மாவட்ட கலாசார வரைபடம் தயாரித்தல் 2. மாணவர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் ஆகியோருக்கு மரக்கறிப் பயிற்செய்கைக்கான நாற்றுக்கள் வழங்கப்பட்டன- 1.அம்பாள்குளம் 2.வட்டக்கச்சி	 25.09.2022 12.12.2022	 30 60	 5,750.00 6,000.00
மொத்தம்				506	93,750.00

வேறு அமைச்சு, திணைக்கள வேலைத்திட்டங்கள்

செலவுத் தலைப்பு	வேலைத்திட்டம்	நடைபெற்ற பிரதேசம்	நடை பெற்ற திகதி	பங்கு பற்றியவர்கள் எண்ணிக்கை	மொத்தச் செலவு
101-02-09-018-2509	கலைஞர் தரவுத்தளத்தினை தாபிப்பது தொடர்பான துண்டுப்பிரசுரங்களை அச்சிடுதல்	மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள்	-	-	7,500.00
			-	-	7,500.00

2.11 தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் செயற்பாடுகள்

தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களமானது இலங்கையின் தேசிய புள்ளிவிபர அலுவலகமாக விளங்குவதுடன் அரசாங்கத்துக்கு தேவையான புள்ளிவிபரத்தரவுகள் சேகரித்தல், வெளியிடுதல் என்பவற்றிற்கு பிரதான பொறுப்புடையதாகவும் விளங்குகின்றது.

நாட்டின் பல்வேறு துறைகளின் சமூக பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவுகளை சேகரித்தல், வழங்குதல் ஆகிய அதன் பொறுப்பிற்கு மேலதிகமாக புள்ளிவிபர சேவைகள் தேவைப்படும் சகல அரசமுகவர்களிற்கும் தொழில்சார் அலுவலர்களை பயிற்றுவித்து பணிக்கமர்த்தலும் அதன் பணியாகும். அத்துடன் புள்ளிவிபர விடயங்கள் தொடர்பில் உதவி தேவைப்படும் முகவர்களிற்கு அதன் தொழில்நுட்ப பிரிவுகளினூடாக புள்ளிவிபர ஆலோசனைச்சேவைகளையும் வழங்குகின்றது.

திணைக்களத்தின் செயற்பாடுகள் :-

- சராசரி நெல்விளைச்சலை மதிப்பீடு செய்வதற்காக ஆண்டுக்கு இரு போகங்களில் நடாத்தப்படும் மாதிரி அளவீடுகள்
- கைத்தொழில், வர்த்தகம், சேவைகள் பற்றிய வருடாந்த அளவீடு
- இலங்கை தொழிற்பல அளவீடு
- நெற் புள்ளிவிபரம்
- மேட்டுநிலப்பயிர்கள் பெரும்போகம் மற்றும் சிறுபோகம்.
- சில்லறை விலைகளும் மற்றும் உற்பத்தியாளர் விலைகளும்
- கால்நடைப் புள்ளிவிபரங்கள்
- கொல்களங்களில் கொல்லப்படும் விலங்குகளின் எண்ணிக்கை
- கட்டிட புள்ளிவிபரம்

செயல்திறன் நடவடிக்கைகள்

2ம் அத்தியாயத்தின் கீழ் வரும் எல்லா வேலைத்திட்டங்களும், 2021ஆம் ஆண்டு முழுமையாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிடைத்த நிதி ஒதுக்கீடுகள்	:-	**ரூபா.739,257.79**
செலவழித்த நிதி	:-	**ரூபா. 623,725.11**
மிகுதி நிதி	:-	**ரூபா. 115,532.68**

2.12 திட்டமிடற்செயலகத்தின் செயற்பாடுகள்

அ. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட வேலைத்திட்டம்

2022 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட வேலைத் திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்காக 8 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட வேலைத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் குறித்த வேலைத் திட்டங்கள் தொடர்பான சாத்தியவள ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் 26.04.2022 அன்று நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் ஆரம்பிக்கப்படாத புதியவேலைகள் அனைத்தையும் இடை நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டதற்கு அமைய பொருளாதார நெருக்கடி காரணமாக 2022 ம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான அனைத்து வேலைத் திட்டங்களும் இடை நிறுத்தப்பட்டன. விபரம் வருமாறு துறை ரீதியான வேலைத் திட்டங்களின் விபரம். (பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் – 2022)

தொ.இல	துறை	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)
01	நீர்வழங்கல்	02	0.28
02	கிராமிய மின் இணைப்பு	09	0.79
03	கல்வி அபிவிருத்தி	24	4.138
04	கிராமிய சுகாதார அபிவிருத்தி	1	0.100
05	பொது விளையாட்டு மைதானம் மற்றும் நூலக அபிவிருத்தி	17	3.399
06	சிறிய நீர்ப்பாசனம்	1	0.225
07	உபகரணங்கள் வழங்கல்	48	4.336
08	பொருளாதார பயன் தரு கட்டடங்கள்	2	0.38
மொத்தம்		**119**	**16.275**

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வேலைத்திட்டங்களின் விபரம்

தொ.இல	பிரதேச செயலர் பிரிவு	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)
01	கரைச்சி	48	6.691
02	கண்டாவளை	14	2.031
03	பூநகரி	42	6.563
04	பச்சிலைப்பள்ளி	15	0.990
மொத்தம்		**119**	**16.275**

ஆ.“கிராமத்துடனான கலந்துரையாடல்” கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்நிதி பொது நிர்வாகம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 4 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் ரூபா 129 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

திட்டத்தின் பெயர்	மொத்த ஒதுக்கீடு	மொத்த செலவீனம்
கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	88,000,000.00	87,398,458.80
உள்ளூராட்சி அபிவிருத்தி திட்டம்	24,500,000.00	24,495,824.48
வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	16,500,000.00	16,149,688.25
மொத்தம்	**129,000,000**	**128,043,971.53**

துறை சார்பான ஒதுக்கீட்டு விபரம்

தொ. இல	துறை	திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)
01	கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	57	46.8
02	உள்ளூராட்சி அபிவிருத்தி திட்டம்	120	67.6
03	வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	10	3
04	கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	38	11.6
மொத்தம்		**225**	**129**

பிரதேச செயலக ரீதியான ஒதுக்கீட்டு விபரம்

தொ. இல	பிரதேச செயலர் பிரிவு	திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)
01	கரைச்சி	100	61
02	கண்டாவளை	46	26
03	பூநகரி	61	31
04	பச்சிலைப்பள்ளி	18	11
மொத்தம்		**225**	**129**

2.13 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு திறன்

அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகானது மாவட்டத்தின் அனர்த்தஅபாய முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு வசதியாக மாவட்ட செயலகத்துடன் இணைக்கப்பட்டுசெயற்பட்டுவருகின்றது. இதன் முக்கிய நடவடிக்கைகளாக பின்வருவன காணப்படுகின்றன.

I. அனர்த்தங்களின் எதிர்கால பாதிப்பைக் குறைப்பதற்காக சமூகங்கள் மற்றும் பங்குதாரர்களைத் தயார்படுத்தி மாவட்டத்தின் இயல்பான சூழ்நிலையில் தணிப்பு, தடுப்பு மற்றும் தயார் நிலை போன்ற அனர்த்த அபாயக்குறைப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்த உதவுதல்.

II. மாவட்டத்தின் நிலையான அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக அபிவிருத்தித்துறையில் அனர்த்த அபாய குறைப்பு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஊக்குவித்தல்.

III. அவசரநிலைகளுக்குபதிலளிக்கஉடனடிமற்றும்தேவையானநடவடிக்கைகளைஎடுப்பதுடன்மாவட்ட மட்டத்தில்பதில்மற்றும்மீட்புசெயற்பாடுகளைவிரைவுபடுத்தஅனைத்துதரப்பினரையும்ஒருங்கிணைத்தல்.

அனர்த்தங்களின் தாக்கங்களைக் குறைப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு 2022 இல் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அ. பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள்

நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூபா)	செலவு (ரூபா)	மிகுதி (ரூபா)
பயிற்சி மற்றும் விழிப்புணர்வு	07	120,000	117,110	2,890



உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த அபாய முகாமைத்துவ செயலமர்வு



அதிபர்களுக்கான அனர்த்த அபாய முகாமைத்துவ செயலமர்வு



தேசிய பாதுகாப்பு தினம் 2022

ஆ. தயார் நிலை மற்றும் திட்டமிடல் செயல்பாடுகள்

நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூபா)	செலவு (ரூபா)	மிகுதி (ரூபா)
தயார்நிலை மற்றும் திட்டமிடல் செயல்பாடுகள்	08	138,800	136,320	2,480



பிரதேச செயலக மட்ட வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை முன்னாயத்த கூட்டம்



உள்ளூராட்சி மட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டம் தொடர்பான மாவட்ட மட்ட கூட்டம்



கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டம் தயாரித்தல்

இ. அவசர பதில் நடவடிக்கை செயற்பாடு

- வடகீழ் பருவகாற்று மழை பதிலிறுத்தல் நடவடிக்கைகள்
- மொன்டஸ் புயலின் போதான பதிலிறுத்தல் செயற்பாடுகள்











2.14 சமூக சேவைகள் திணைக்களம்

மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் சமூக சேவைகள் திணைக்களம், அங்கவீனமுற ற நபர்களுக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்கள்

அ. அங்கவீனமுற்ற நபர்களுக்கான ரூபா 5,000 கொடுப்பனவு, மாற்றுவலுவுடையோரின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதற்காக ரூபா 5,000 கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இல	பிரதேச செயலாளர் பிரிவு	கொடுப்பனவு பெறுபவர்கள்	காத்திருப்பு பட்டியலிலுள்ளவர்கள்
1	கரைச்சி	548	533
2	கண்டாவளை	301	326
3	பூநகரி	304	152
4	பச்சிலைப்பள்ளி	253	215
மொத்தம்		**1406**	**1226**

ஆ. 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கானரூபா 2,000 கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இல	பிரதேச செயலாளர் பிரிவு	கொடுப்பனவு பெறுபவர்கள்	காத்திருப்பு பட்டியலிலுள்ளவர்கள்
1	கரைச்சி	2013	769
2	கண்டாவளை	732	301
3	பூநகரி	609	220
4	பச்சிலைப்பள்ளி	379	200
மொத்தம்		**3823**	**1490**

இ. குறைந்தபட்ச வசதிகள் மற்றும் சுகாதார பொருட்கள் வழங்குதல்.

இல	பிரதேச செயலாளர் பிரிவு	தொகை (ரூபா)
1	கரைச்சி	450,000
2	கண்டாவளை	336,000
3	பூநகரி	450,000
3	பச்சிலைப்பள்ளி	450,000
மொத்தம்		**1,686,000**

ஈ. கிராமிய முதியோர் சங்கங்களை வலுவூட்டல்

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதி நிலமை தொடர்பான கூற்று

1.6.1.1 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்துக்கள் பற்றிய கூற்றில் (ACA 6) இல் காட்டப்பட்டுள்ள நடைமுறையல்லா சொத்துக்களின் வருட ஆரம்ப மீதியானது (01.01.2022) மீளாய்வாண்டிற்கு நேர் முன்னைய ஆண்டின் நிதிநிலைமைக்கூற்றில் (ACA- P 2021) வெளிப்படுத்தப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதியுடனும் மற்றும் மீளாய்வாண்டின் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் New CIGAS Asset report for final accounts for the year இன் வருட ஆரம்ப நடைமுறையல்லாச் சொத்துக்களின் கூட்டுமொத்த பெறுமதியுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு

விபரம்	மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் ACA 6 பிரகாரம் 2022.01.01 இல் மீதி (ரூபா)	ACA- P இன் பிரகாரம் 2021.12.31 இல் மீதி (ரூபா)	மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் New CIGAS Asset report இன் கூட்டுமொத்தம் (ரூபா)
நடைமுறையல்லாச் சொத்து மீதி	1,312,220,835	1,333,022,830	1,314,370,685

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் நடைமுறையல்லா சொத்துக்கள் பற்றிய கூற்றில் (ACA 6) இல் காட்டப்பட்டுள்ள நடைமுறையல்லா சொத்துக்களின் வருட இறுதி மீதியானது திறைசேரி புத்தகங்களின் பிரகாரமுள்ள வருட இறுதியுள்ள மீதியுடனும் மீளாய்வாண்டின் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் New CIGAS Asset report for final accounts for the year இன் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கூட்டுமொத்த பெறுமதியுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு

விபரம்	மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் ACA 6 பிரகாரம் 2022.12.31 இல் மீதி (ரூபா)	திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் 2022.12.31 இல் மீதி (ரூபா)	மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் New CIGAS Asset report இன் கூட்டுமொத்தம் (ரூபா)
நடைமுறையல்லாச் சொத்து மீதி	1,333,863,078	1,334,203,078	1,334,186,053

(இ) மீளாய்வாண்டின் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் New CIGAS Asset report for final accounts for the year இன் கூட்டுமொத்தம் ரூபா 7,016,125 நடைமுறையல்லா சொத்துக்கள் முடிவுறுத்தல் செய்யப்பட்ட போதும் (ACA 6) இல் நடைமுறையல்லாச் சொத்து முடிவுறுத்தலாக ரூபா 4,096,930 ஆக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் ரூபா 2,919,195 வேறுபாடு காணப்பட்டது. இதனால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,919,195 இனால் மிகைப்படுத்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் New CIGAS Asset report for final accounts for the year இன் கூட்டுமொத்தம் ரூபா 26,831,494 நடைமுறையல்லா சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் (ACA 6) இல் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கொள்வனவாக ரூபா 24,580,049 ஆக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் ரூபா 2,251,445 வேறுபாடு காணப்பட்டது. அதனால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,251,445 இனால் குறைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் ACA 6 இல் நடைமுறையல்லா சொத்துக்களின் Opening balance addition மீதி ரூபா 1,159,125 ஆக காணப்பட்ட போதும் 2022 ஆண்டின் திறைசேரி அச்சுப்பிரதியில் (SA 82) சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,499,125 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 340,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஊ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிநிலைமை கூற்றில் (ACA- P) வெளிப்படுத்தப்பட்ட நிதி அல்லாச் சொத்துக்களின் மீதி ரூபா 1,333,863,078 ஆக காணப்பட்ட போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி திறைசேரி அச்சுப்பிரதியில் (SA 82) சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,334,203,078 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 340,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

(எ) மாவட்ட செயலக நிதி நிலமை கூற்று (ACA-P) இல் நிதி அல்லா சொத்துகளின் பெறுமதியினுள், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 04/2018 ஆம் இலக்க 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு மாறாக, 2016 - 2022 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்ட சொத்துகளின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 7,655,458 உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் நிதிநிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 7,655,458 ஆல் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமைக்கூற்றில் (ACA-P) காணப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண ஒதுக்க மீதி ரூபா 1,333,863,079 ஆக காணப்பட்டபோதிலும் திறைசேரியின் அச்சுப்பதிப்பின் பொறுப்புக்களின் ஒதுக்க மீதி ரூபா 1,334,203,079 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 340,000 வேறுபாடு காணப்பட்டது.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

இல	பதிவேட்டு வகை	உரிய பிரமாணம்	அவதானிப்பு
01.	நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு	நிதிஒழுங்கு விதி 110	நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை.
02.	கணினி மற்றும் துணைச்சாதனங்கள் பதிவேடு	முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றிக்கைகள் IAI 02/2002	நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை.
03.	பிணைகள் பதிவேடு	நிதிஒழுங்கு விதி 891(1)	நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை.
04.	மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு	நிதிஒழுங்கு விதி 454(2)	நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை.
05.	விடுமுறை பதிவேடு	தாபனவிதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு	நாளதுவரை இற்றைப்படுத்தப்பட்டிருக்க வில்லை.
06.	பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு	நிதிஒழுங்கு விதி 214	நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தினால் கட்டுநிதிக்காக ரூபா 1,013,320,106 பெறுமதி கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும் ரூபா 855,075,000 பெறுமதியான கட்டுநிதியே பெறப்படடிருந்தது. எனவே மீளாய்வாண்டினுள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் ரூபா 158,245,106 கட்டுநிதி பற்றாக்குறையாக வழங்கப்பட்டமையால் பாராளுமன்றத்தினால்

மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்த முடியாதிருந்ததுடன் மாவட்ட செயலகத்தின் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் நிறைவு மட்டத்தை அடையமுடியவில்லை.

2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 268-1-1-5-1501 செலவின விடயத்திற்கு ஆண்டு மதிப்பீட்டில் எவ்விதமான ஒதுக்கீடுகளும் செய்யப்படாது குறைநிரப்பு ஒதுக்கீடு மூலம் ரூபா 880,000 பெறப்பட்டு குறித்த செலவின விடயம் புதிதாக உருவாக்கப்பட்டு (Creation of object code) ரூபா 880,000 செலவு செய்யப்பட்டுள்ளமையானது பாதீடு தயாரிப்பில் ஒரு வினைத்திறனான தன்மை காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட செலவின விடயத்திற்கும் திறைசேரி புத்தகங்களின் செலவின விடயத்திற்குமிடையே ரூபா 796,291 வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 எல்லைகளை மீறுதல்

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் முற்பண கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் திணைக்கள புத்தகத்திற்கும் திறைசேரி புத்தகத்திற்குமிடையில் ரூபா. 4,175 தொடக்கம் ரூபா. 184,470 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு பணிகளுக்கு 54 எண்ணிக்கையான ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ரூபா 1,322,586,863 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாட்டில் ரூபா 425,328,790 செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 897,258,074 பெறுமதியான 67.84 வீதமான தொகை மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளது.

2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு	பெறுமதி (ரூபா)	இணங்காமை
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்		
(i) நிதி ஒழுங்கு விதிகள் 103(1)	-	இருப்பு பொருள் காணாமல் போனமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) நிதி ஒழுங்கு விதிகள் 104(1)	62,550	நட்டம் ஏற்பட்டவுடன் அது எத்தகையது என்பதையும் அதற்கான காரணங்களை அறிவதற்காகவும் பொறுப்பை நிலைநாட்டுவதற்காகவும் விசாரணைகள் தொடரப்படவில்லை
(iii) நிதி ஒழுங்கு விதிகள் 104(2)		இழப்புக்கள் பற்றி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை
(iv) நிதி ஒழுங்கு விதிகள் 104(3)		ஆரம்ப புலன் விசாரணை மேற்கொண்டு தொடக்க அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மாவட்டச்செயலாளரினால் கடந்த 21 மாதங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை
(v) நிதி ஒழுங்கு விதிகள் 104(4)		முழு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) ஏனைய சுற்றறிக்கைகள்		
(i) காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 464 ஆம் அத்தியாயம் 19(2) ஆம் பிரிவு		**(i)** வழங்கப்பட்ட 397 காணி அனுமதிப் பத்திரங்கள் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலகங்களில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

AUDIT OFFICE OF SRI LANKA

			(ii) வழங்கப்பட்ட 434 காணி அளிப்பு பத்திரங்கள் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலகங்களில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது (iii) காணி கொள்விலை அறவிடப்பட வேண்டிய 220 நபர்களிடமிருந்து 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை பிரதேச செயலகங்களில் கொள்விலை அறவிடப்படாமல் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது
(ii)	காணி ஆணையாளர் திணைக்களத்தின் 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 96/05 இலக்க சுற்றுநிருபத்தில் 5(iii), 6(இ)	10,979,750	குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு 2005 தொடக்கம் 2022 வரை ரூபா 10,240,750 பெறுமதியான வருடாந்த நிலுவை மற்றும் ரூபா 739,000 குற்றப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.6 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவும்

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதி ஒழுங்கு விதி 371(5) இற்கமைய குறித்த பணிகள் பூரணப்படுத்தப்பட்ட 10 நாட்களில் பெற்றுக் கொண்ட உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 37 சந்தர்ப்பங்களுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 784,300 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி 11 நாட்கள் தொடக்கம் 99 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2.7 முற்பணக் கொடுப்பனவு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச உத்தியோகத்தர் முற்பணக்கணக்கு இணக்கக்கூற்றின் பிரகாரம் பதவியிலிருந்து விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 613,380 ஆனது கடந்த 12 வருடங்களுக்கு மேலாக அறவிட்டுக்கொள்வதற்கு இற்றை வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச உத்தியோகத்தர் முற்பணக்கணக்கு இணக்கக்கூற்றின் பிரகாரம் ஓய்வுதியம் பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 104,300 ஆனது கடந்த ஒரு வருடத்திற்கு மேல் அறவிட்டுக்கொள்வதற்கு இற்றை வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

கரைச்சி பிரதேச செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டு சௌபாக்கிய உற்பத்தி கிராமம் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட் ரூபா 3,000,000 பெறுமதியான சந்தை தொகுதி செயற்த்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையிலும் நாளதுவரை குறித்த செயற்த்திட்டம் செயற்படுத்தப்படாது காணப்படுகின்றமையானது குறித்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் நோக்கம் அடையப்பெற்றிருக்கவில்லை.

3.2 உள்நாட்டு நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

3.2.1 ஒப்பந்த நிர்வாகம்

பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட 04 எண்ணிக்கையான வேலைத்திட்டங்கள் ஒப்பந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட சில வேலைகள் முடிவுறுத்தப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 561,161 மேலதிக கொடுப்பனவாக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

3.2.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

பூநகரி பிரதேச செயலகத்தினால் ரூபா 990,684 பெறுமதியில் 268-01-01-00-2509 செலவின விடயத்தின் கீழ் 03 செயற்திட்டங்களுக்கு மார்ச் 2022 இல் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்தங்களில் ரூபா 221,876 பெறுமதியான வேலைகள் நிறைவேற்றி கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் மிகுதி வேலைகள் நிறைவேற்றப்படாததுடன் குறித்த செயற்திட்டங்களும் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

3.3 பெறுகைகள்

பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 2.12 இன் பிரகாரம் உரிய வெளிப்படுத்துகைகள் கரைச்சி பிரதேச செயலகத்தில் செய்யப்பட்டிருக்கவில்லை.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் ரூபா 463,737,097 பெறுமதியான 271 வகையான சொத்துக்கள் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் இவை வருடாந்த இருப்பு பொருள் கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதிய CIGAS மென்பொதியின் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினை பரீட்சிப்பு செய்த போது 422 வகையான 2,365 எண்ணிக்கையிலான சொத்துக்கள் CIGAS மென்பொதியில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் குறித்த சொத்துக்களின் பெறுமதியும் கணக்காய்விற்கு கிடைத்திருக்காமையினால் குறித்த சொத்துக்களினை கணக்காய்வில் சான்றுப்படுத்த முடியாதுடன் நிதிநிலைமைக்கூற்றில் (ACA –P) சொத்துக்களில் நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(இ) கரைச்சி பிரதேச செயலகத்தில் ரூபா 160,105 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு வருடங்கள் கடந்தும் பாவனைக்குட்படுத்தப்படாது புதிதாக களஞ்சியத்தில் காணப்படுகின்ற போதும் குறித்த பொருள் கொள்வனவின் தேவைப்பாட்டினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

(ஈ) மாவட்டச் செயலகத்திற்கு உரித்தாக்கம் செய்யப்படாத 12 எண்ணிக்கையான அரச காணிகள் மாவட்டச் செயலகத்திற்கு உரித்தாக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் எவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதும் ரூபா 536,034,986 பெறுமதியான 39 எண்ணிக்கையிலான கட்டிடங்கள் குறித்த உரிமையற்ற அரச காணிகளில் நிறுவப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(உ) பிரதேச செயலகங்களில் கட்டப்பட்ட ரூபா 32,544,852 பெறுமதியான பிரதேச செயலர் விடுதிகள் மற்றும் உத்தியோகத்தர் விடுதி நிர்மாணம் செய்யப்பட்ட காலப்பகுதியிலிருந்து 2-3 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றன.

(ஊ) பிரதேச செயலகங்களினால் கட்டப்பட்ட ரூபா 4,300,000 பெறுமதியான 05 எண்ணிக்கையிலான பொது மண்டபங்கள் 2-5 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றன.

(எ) கிளிநொச்சி பிரதேச மக்களுக்கு குடியிருப்பதற்கு வீடு இல்லை என பிரதேச செயலகங்களினால் இனங்காணப்பட்டு அம் மக்களுக்கு ரூபா 126,020,000 அமைக்கப்பட்ட 220 எண்ணிக்கையான வீடுகளில் மக்கள் குடியிருக்காமல் கடந்த 01- 12 வருடங்களாக பயன்பாடற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஏ) மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு வடக்கு அபிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிதி பங்களிப்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் 2018, 2019 ஆம் ஆண்டுளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 54,524,943 பெறுமதியான 04 வேலைத்திட்டங்கள் கடந்த 4 தொடக்கம் 5 வருடங்களாக செயற்பாடற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

3.5 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர் விடுதியில் களவாடப்பட்ட பொருட்கள் தொடர்பில் விசாரணை செய்து பொறுப்பினை நிலைநாட்டுவதற்காக மாவட்டச் செயலாளரினால் அறிக்கையிடும் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மரங்கள், தளபாடங்கள் கொண்டுசெல்லும் அனுமதிப்பத்திர விநியோகத்தின் போது கொண்டு செல்லும் மரங்களின் மீது இலட்சினை பொறியிட பயன்படுத்தப்படும் சுத்தியல்

பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அவரிடம் வினவிய போது குறித்த சுத்தியல் காணாமல் போனதாக தெரிவித்திருந்தார். நாளதுவரை அது தொடர்பாக கடந்த மூன்று வருடங்களாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த இருப்பு பொருளினை கட்டுக்காப்பாக வைத்திருந்த அலுவலர் மீது காணாமல் போனமை தொடர்பில் எவ்விதமான விசாரணைகளும் அறிக்கையிடும் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கிளிநகர் சமுர்த்தி வங்கியில் கடன் எழுதுநரால் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக KVM/A/C/DS/KAR/Pet/2021/AQ/01 இலக்க 26.11.2021 ஆம் திகதிய கணக்காய்வு ஐயவினாவில் மோசடியாக சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 1,526,457 இல் ரூபா 400,000 மீளச்செலுத்தப்பட்ட போதும் மிகுதிப் பணம் அறிக்கையிடம் திகதி வரை அறவிடவதற்கு உரிய நடவடிக்கைகள் மாவட்டச் செயலாளரினால் எடுக்கப்பட்டிருக்காததுடன் சமுர்த்திதிணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மோசடி செய்த தொகை ரூபா 372,500 இல் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டு நாளது வரை ரூபா 275,000 செலுத்தியுள்ளார். மிகுதி மோசடி தொகையை அறவிடுவதற்கு நாளது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) வேறு திணைக்களங்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்ட மாவட்டச் செயலக அரச விடுதியின் வாடகையினை அறவிடுவதற்கு நாளது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் 18 எண்ணிக்கையிலான காணிகளின் பெறுமதி ரூபா 332,575,000 மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அவற்றில் 06 எண்ணிக்கையிலான காணிகளுக்கு மட்டுமே சட்டரீதியான உரிமை (Ownership) கையளிக்கப்பட்டிருப்பது மாவட்டச்செயலாளரின் 2023 ஏப்ரல் 03 ஆம் திகதிய KN/DS/FIN/01/AQ/01-01 ஆம் இலக்க கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 12 எண்ணிக்கையிலான காணிகள் மாவட்டச் செயலகத்திற்கு உரித்தாக்கப்பட்ட சட்டரீதியான ஆவணங்கள் கையளிக்கப்பட்டிருக்காத போதும் ரூபா 232,100,000 பெறுமதியான காணிகள் ACA 6 இல் அதிகரித்து காட்டப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

4. நிலைபேறான அபிவிருத்தி

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்ட செயலகத்தால் இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட இலக்குகள் நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான மையப்புள்ளிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

5. மனிதவள முகாமைத்துவம்

5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்டவாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் 4 பிரதேச செயலகங்களின் 4 வகையான பதவி அணியினருக்கான 24 பதவியினர் வெற்றிடமாகவும் மற்றும் 84 பதவியினர் மேலதிகமாகவும் மீளாய்வாண்டில் இறுதியில் காணப்பட்டிருந்தனர்.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக 2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதியிடப்பட்ட 01/2021 ஆம் இலக்கமிடப்பட்ட அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் சுற்றறிக்கை, 2021 செப்தெம்பர் 13 ஆம் திகதியிடப்பட்ட 18/2021 ஆம் இலக்கம் கொண்ட அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் இன்றி 123 அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பா. பற்குணன்
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

04. செயலாற்றுகை சுட்டிகள்

- 2500 குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கல்.
- ரூபா 2300 பெறுமதியானசத்துணவு பொதிகள் கர்ப்பிணித்தாய்மார்களுக்குவழங்குதல்.
- 3925 முதியோருக்கு கொடுப்பனவு வழங்கல்.
- 24 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுத்தல்.
- 37200 பயானளிகளுக்கு சமூக பாதுகாப்பு கொடுப்பனவு வழங்கல்.
- 1 மனைப்பொருளியல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்.
- 1650 பேருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கல்.

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

குறியீட்டுசுட்டிகள்	எதிர்பார்த்தவெளியீட்டின்சதவீதமாக (%) உண்மையானவெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
2500 குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கல்.	90 %		
ரூபா 23000 பெறுமதியான கர்ப்பிணித்தாய்மார்களுக்கு சத்துணவு பொதிகள் வழங்குதல்.		87%	
3925 முதியோருக்கு கொடுப்பனவு வழங்கல்.	97%		
24 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுத்தல்	100%		
37200 பயானளிகளுக்கு சமூக பாதுகாப்பு கொடுப்பனவு வழங்கல்	98%		
1 மனைப்பொருளியல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்	100%		
1650 பேருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கல்.		85%	

05. பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

இல	இலக்குகள்	
1	இலக்கு - 1	வறுமையின்மை
2	இலக்கு - 2	பட்டினியின்மை
3	இலக்கு - 3	சிறந்த சுகாதாரமும் உடல் ஆரோக்கியமும்
4	இலக்கு - 4	தரமான கல்வி
5	இலக்கு - 5	கௌரவமான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்
6	இலக்கு - 6	வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு உற்பத்தி கண்டுபிடிப்பு
7	இலக்கு - 7	நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயுமான சமத்துவமின்மையை ஒழித்தல்
8	இலக்கு - 8	நிலைபேறான நகரங்களையும் குடியிருப்புக்களையும் உருவாக்கல்
9	இலக்கு - 9	காலநிலைக்கானசெயற்பாடுகள்

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

இலக்கு/குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	முன்னேற்றம்		
			0% - 49%	50 % - 74 %	75%-100 %
இலக்கு -1 **வறுமையின்மை**					
வறுமையை ஒழிப்பதற்கான வாழ்வாதார உதவிகளை வழங்கல்	சமுர்த்தி சமூக பாதுகாப்பு கொடுப்பனவாக 36732 பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது.	பயனாளிகளின்எண்ணிக்கை			✔
தானிய பயிர்ச்செய்கை உற்பத்தி திட்டத்தை முன்னெடுத்தல்	4 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 451 பயனாளிகளுக்கு பயறு,உழுந்து வழங்கி வைக்கப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை		✔	
சமுர்த்தி உதவி பெறுவோரை உயர்த்துதல்	22508 சமுர்த்தி பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்கள்.	பயனாளிகளின் எண்ணிக்கை			✔
வறுமையை குறைத்தல்	முதியோர் கொடுப்பனவு 3823 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை			✔
இலக்கு -2 **பட்டினியின்மை**					
வீட்டுத்தோட்டம் மற்றும் உற்பத்தி முயற்சிகளை அதிகரித்தல்	20,074 குடும்பங்களுக்கு விதைப்பொதிகள் மற்றும் நாற்றுக்கள் வழங்கி வைக்கப்பட்டது.	குடும்பங்களின் எண்ணிக்கை		✔	
வீட்டுத்தோட்டம் மற்றும் உற்பத்தி முயற்சிகளை அதிகரித்தல்	சேதன உற்பத்தி வேலைத்திட்டத்திற்காக 95 முயற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.	முயற்சியாளர்களின் எண்ணிக்கை			✔
ஆரோக்கியமான குழந்தை வளர்ப்பு	இரட்டைக் குழந்தைகளுக்கான கொடுப்பனவுரூபா22,500	குழந்தைகளின் எண்ணிக்கை			✔

	வழங்கி வைக்கப்பட்டது.				
போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தல்	ரூபா 20,000 பெறுமதியான சத்துணவுப் பொதி கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டது.	கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை			✔
இலக்கு -3 **சிறந்த சுகாதாரமும் உடல் ஆரோக்கியமும்**					
உடல்ஆரோக்கியத்தைமேம் படுத்தல்	ரூபா 1,686,000 பெறுமதியான குறைந்தபட்ச வசதிகள் மற்றும் சுகாதார பொருட்கள் 4 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை			✔
இலக்கு -4 **தரமானகல்வி**					
மாணவர்களின் இடைவிலகல் எண்ணிக்கையை குறைத்தல்	பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய வரவு ஒழுங்கின்மையான மாணவர்களுக்குரூபா 2400 பெறுமதியான கல்வி உதவி வழங்கப்பட்டது.	மாணவர்களின்எண்ணிக்கை		✔	
தொழிற்கல்வியினை வழங்குதல்	80 மாணவர்களுக்கு ஒரு வருட கால மனைப்பொருளியல் நிகழ்ச்சித் திட்டம்	நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை		✔	
இலக்கு -5 **கௌரவமான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்**					
வேலையின்மையை குறைத்தல்	வேலை வாய்ப்பில் ஈடுபடும் அங்கவீனமுற்ற 1406 நபர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுவழங்கப்பட்டது	பயனாளிகளின் எண்ணிக்கை			✔

தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல்	விசேட சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 218 தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சி வகுப்பு இடம்பெற்றது.	நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை		✔	
இலக்கு -6 **வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு உற்பத்தி கண்டுபிடிப்பு**					
உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்	4 பிரதேச செயலாளர் பிரிவிற்கும் பொது உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தினூடாக 16.275மில்லியன் நிதி வழங்கப்பட்டது.	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை		✔	
உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்	கிராமத்தின் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4 பிரதேச செயலகங்களுக்கும் 129 மில்லியன் நிதி விங்கப்பட்டுள்ளது.	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை			✔
இலக்கு -7 **நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயுமானசமத்துவமின்மையை ஒழித்தல்.**					
மதங்களுக்கிடையிலான வேற்றுமையை ஒழித்தல்.	4 பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து 106 பேர் பங்கு பற்றல் - 4 வேலைத்திட்டங்கள்	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை		✔	
இலக்கு -8 **நிலைபேறான நகரங்களையும்குடியிருப்புக்களையும் உருவாக்கல்**					
மனித குடியேற்ற வசதிகளை அதிகரித்தல்	24 பயனாளிகளுக்கு புனர் மற்றும் புதிதான நிர்மான வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்து	அமைத்து கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை			✔

	கொடுக்கப்படபட்டன.				
பேரிடர் அபாயத்தை குறைப்பதில் முதலீடு செய்தல்	வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களை பாதுகாப்பதற்கான தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.	தணிப்பு நடவடிக்கைகளின் எண்ணிக்கை		✔	
இலக்கு -9 **காலநிலை செயற்பாடு**					
அனர்த்த தணிப்பு விழிப்புணர்வு செயற்பாடு	பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு முற்கூட்டிய நடவடிக்கை தொடர்பாக அறிவு மற்றும் திறனை மேம்படுத்த விழிப்புணர்வு செயற்பாடு நடாத்தபபட்டது.(07 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்)	விழிப்புணர்வு செயற்பாடுகளின் எண்ணிக்கை		✔	

06. மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

மாவட்ட செயலகம்

பதவி நிலை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்
சிரேட்ட	13	10	3
மூன்றாம் நிலை	4	2	2
இரண்டாம் நிலை	78	139	61
ஆரம்ப நிலை	28	22	6

பிரதேச செயலகங்கள்

பதவி நிலை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்
சிரேட்ட	16	15	01
மூன்றாம் நிலை	12	04	08
இரண்டாம் நிலை	347	367	87
ஆரம்ப நிலை	33	25	08

6.2 பற்றாக்குறையான மனித வளங்கள்

மனிதவள பற்றாக்குறை காரணமாக வேலைகளை அலுவலர்களிடையே பகிர்ந்தளிப்பது சிரமங்கள்ஏற்படுவதுடன் வேலைகளில் தாமதங்களும் ஏற்படுகின்றன. இதனால் கூடுதலான மேலதிக நேரக்கொடுப்பனவுக்கு அதிக நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப் பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா" 000)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு/வெளிநாட்டு)	வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு
			உள் நாட்டு	வெளி நாட்டு		
மாவட்டதொழிற்சந்தை	209	1 நாள்	23500		328-1-9-2509-013	இளைஞர்களுக்குதொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதோடுபயிற்சிநெறியிலும் இணைக்கப்பட்டது
முயற்சியாண்மைபயிற்சிநெறி	65	6 நாள்	79900		328-2-1-2509	தொழில் முயற்சியாளருக்கானதொழில் உருவாக்கல்,சந்தைப்படுத்தல் உபாயங்களைதொடர்பானவிளக்கம்
சுாதாரணதரபரீட்சையில் சித்தியடையதவறியமாணவர்களுக்கானபயிற்சிநெறி-கரைச்சி	85	3 நாள்	14678		328-1-9-2509-013	தொழிற் பயிற்சிநெறிக்கானவழிகாட்டல்
சாதாரணதரபரீட்சையில் சித்தியடையதவறியமாணவர்களுக்கானபயிற்சிநெறி-பளை	20	1 நாள்	4250		328-1-9-2509-013	தொழிற் பயிற்சிநெறிக்கானவழிகாட்டல்
சாதாரணதர பரீட்சையில் சித்தியடைய தவறிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி-பூநகரி	15	1 நாள்	3500		328-1-9-2509-013	தொழிற் பயிற்சிநெறிக்கானவழிகாட்டல்
சாதாரணதர பரீட்சையில் சித்தியடைய தவறிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி-கண்டாவளை	25	1நாள்	4500		328-1-9-2509-013	தொழிற் பயிற்சிநெறிக்கானவழிகாட்டல்

07. இணக்கப்பாட்டு அறிக்கைகள்

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை	இணக்க மற்றதாயின் சுருக்கமாக விளக்குக	எதிர்காலத்தில் இணக்க மற்றதனை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது
1	**நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக்கணக்குகள் வர்த்தக முற்பணக்கணக்குகள்			
1.4	களஞ்சிய முற்பணக்கணக்கு			
1.5	சிறப்பு முற்பணக்கணக்கு			
1.6	ஏனைய			
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன்படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.4	உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப்புதுப்பித்தல் மற்றும்பராமரித்தல்.	பேணப்படுகின்றது		

2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (சிகாஸ்) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.7	பொருட்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.8	இருப்புப்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.9	இழப்புப்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.10	பொறுப்புப்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GAN-20) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
3	**நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல்(நி.பி135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டுள்ளன.	ஆம்		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது.	ஆம்		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	ஆம்		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல:171/2004ன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	ஆம்		
4	**வருடாந்த திட்டம் தயாரித்தல்.**			
4.1	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		

4.2	வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
4.3	வருடாந்த உள்ளகக்கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசியவ.செ.தி திணைக்களத்துக்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்படுகின்றது.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்படுகின்றது.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதிகளில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
6	**உள்ளகக்கணக்காய்வு**			
6.1	நி.பி134 (2) டி.எம.ஏ1-2019படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக்கணக்காய்வு திட்டம் தயாரித்தல்.	ஆம்		
6.2	அனைத்து உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
6.3	அனைத்து உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19ஆம் இலக்க தேசியகணக்காய்வு சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதிப்பிரமாணக்குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு**			

7.1	டிஎம்ஏ1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்குக்குறைந்தது 04கணக்காண்டு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	ஆம்		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றிக்கை இல 01/2017 சொத்துப்பெறுகை முற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர்ஜனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	பேணப்படுகின்றது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13ஆம் அத்தியாயத்தின் படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர்ஜனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	பேணப்படுகின்றது		
8.3	அரச நிதிசுற்றறிக்கை இல05/2016 இன்படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இல்லை		
8.5	நி.பி772 இன்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	ஆம்		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	பேணப்படுகின்றது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு	பேணப்படுகின்றது		

	மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.			
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	பேணப்படுகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி103, 104,109மற்றும்110இன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	பேணப்படுகின்றது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல2016.̇.30 இன்பத்தி3.1இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	பேணப்படுகின்றது		
10	**வங்கிக் கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணங்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றழித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது.		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	பொருத்தமற்றது		
10.3	வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல் மற்றம் சரி செய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	உரிய திகதியில் என்னால் சீர் செய்யப்பட்டது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்.**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	பேணப்படுகின்றது		
11.2	நி.பி94(1) இன்படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	பேணப்படுகின்றது		
12	**அரச அலுவலர்களின் முற்பணப்பணக்கு**			

12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	பேணப்படுகின்றது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	பேணப்படுகின்றது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	ஆம்		
13	**பொதுவைப்புக்கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	ஆம்		
13.2	பொதுவைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
14	**முற்பணக்கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது		
14.2	நி.பி371இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல்,அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்.	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது		
14.3	நி.பி371இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாததற்காலிக இடைக்கால வழங்கல்.			
14.4	மாதந்தோறும்திறைசேரிபுத்தகங்களுடன் கணக்குமீதிகணக்கிணக்கம்செய்யப்படு தல்வேண்டும்.	பேணப்படுகின்றது		
15	**வருமானக்கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பி	ஆம்		

	செலுத்தியிருக்க வேண்டும்.			
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவுவைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	ஆம்		
15.3	நி.பி176 இன்படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்.	ஆம்		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்.	பேணப்படுகின்றது		
16.3	20.09.2017 தேதியிடப்பட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல04/2017 இன்படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது		
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்கல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.**			
17.1	தகவல் உரிமைச்சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்.	பேணப்படுகின்றது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுக் கருத்துக்கள்/குற்றச் சாட்டுக்களை எளிதாக்குதல்.	ஆம்		

17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8மற்றும்10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	ஆம்		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் சமர்ப்பித்தல்.**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 05/2018(1)இன்படி பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்.	ஆம்		
18.2	சுற்றறிக்கையின் பந்தி2.3ஐப் பொறுத்தவரை பிரசைகள் பட்டயம் பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறி முறையை அமைத்துள்ளது.	ஆம்		
19	**மனித வளத்திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல02/2018இன் இணைப்பு02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத்திட்டம் தயாரித்தல்.	ஆம்		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12மணி நேரபயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற் கண்ட மனித வளத்திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	ஆம்		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	ஆம்		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5வது			

	பந்திக்கு எற்ப மனிதவள மேம்பாட்டுத்திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல்.			
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்.	சீர் செய்யப்பட்டுள்ளது		